நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 28.08.2020

**<u>சாத்தூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்</u>**

**நிகழும் மங்களகரமான ஆண்டு சார்வரி வருடம் ஆவணி மாதம் 15 ஆம் நாள் 2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : திரு.என்.ராஜமாணிக்கம், எம்.ஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

<u>பொருள் எண்: 1</u>

சாத்தூர் நகராட்சி கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள யூனிட்–2ன் 10 எச்.பி. பம்பு மோட்டார் பழுது ஏற்பட்டு இயக்கமுடியாத நிலையில் உள்ளது. எனவே அதனை பழுது பார்க்கும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.16,160/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 249/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 646, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 2</u>

நகராட்சி ஆணையாளர் அவர்களின் குறிப்பில் ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தில் அடிக்கடி மின்துண்டிப்பு ஏற்படுவதால் புதியதாக ஒரு இன்வெட்டர் பொருத்தவும், மேற்கண்ட பணியினை தமிழ்நாடு மாவட்ட சட்ட விதி–15ன் கீழ் செய்தமைக்கும், அதற்கான செலவுத் தொகை ரூ.20,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.
(ந.க.எண். 263/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 647, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 3</u>

சாத்தூர் நகராட்சியில் 2020–21 ஆண்டுக்கு அடிபம்பு மற்றும் விசைப் பம்புகளைப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 05.06.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டு விகிதத்தினை விட திரு.பி.சுப்பாராஜ் என்பவர் 0.05 சதவீதம் குறைவாக அளித்துள்ளதை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. திரு.எம்.முத்துராமலிங்கம் மதிப்பீட்டை விட – 0.03 சதவீதம் அதிகம்
2. திரு.பி.சுப்பாராஜ் மதிப்பீட்டை விட – 0.05 சதவீதம் குறைவு

(ந.க.எண் 220/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 648, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**
பொருள் எண்: 4

சாத்தூர் நகராட்சியில் 2020–21 ஆண்டுக்கு பாதாளச் சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 05.06.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டு விகிதத்தினை விட திரு.பி.சுப்பாராஜ் என்பவர் 0.18 சதவீதம் குறைவாக அளித்துள்ளதை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1. திரு.எம்.முத்துராமலிங்கம் மதிப்பீட்டை விட – **0.42** சதவீதம் அதிகம்
2. திரு.பி.சுப்பாராஜ் மதிப்பீட்டை விட – **0.18** சதவீதம் குறைவு

(ந.க.எண் 218/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 649, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 5

சாத்தூர் நகராட்சியில் 2020–21 ஆண்டுக்கு குடிநீர் விநியோகப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 05.06.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டு விகிதத்தினை விட திரு.எம்.முத்துராமலிங்கம் என்பவர் 0.08 சதவீதம் குறைவாக அளித்துள்ளதை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

1. திரு.எம்.முத்துராமலிங்கம் மதிப்பீட்டை விட – **0.08** சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் மதிப்பீட்டை விட – **0.24** சதவீதம் அதிகம்

(ந.க.எண் 222/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 650, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**
பொருள் எண்: 6

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி மற்றும் யூபிஸ் 2020–2021–ம் ஆண்டுக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 19.06.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன்படி மூன்று நிறுவனத்தினர் கீழ்க்கண்டுள்ளபடி விலைப்புள்ளிகள் அளித்துள்ளனர்.

1. Star System Services, Sivakasi. - Rs. 58500.00
2. Genius Sales & Services, Sivaksi - Rs. 59000.00
3. Rathan Computers, Sivakasi - Rs. 59500.00

வரப்பெற்ற விலைப்புள்ளியில் M/s.Star System Services, Sivakasi நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றம் ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண். 1728/2011/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 651, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 7</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.K.Dis.No.28369/J3/2018, நாள்:04.12.2018ம் தேதிய செயல்முறை ஆணையில் அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப3) துறை, நாள்: 30.04.1997ல் கூறிய அளவுகோலின்படி (Norms) தேவைப்படும் துப்புரவு பணியாளர் மாற்றாக ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் (Out Sourcing) தினக்கூலி சம்பளத்தில் 41 நபர்களை நியமித்துக் கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்படி 26.12.2018ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியில் ரெலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தார் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.307/– வீதம் அளித்துள்ள குறைந்தபுள்ளியை இந்நகர்மன்ற தீர்மான எண்.471, நாள்:28.06.2019ன்படி ஒப்புதல் பெற்று இவ்வலுவலக ந.க.எண்.1582/15/எச்1, நாள்:30.09.2019ம் தேதிய செயல்முறை ஆணையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.3,4,5,12,13,14,15,16,17,21 மற்றும் 22 ஆகிய 11 வார்டுகளில் தூய்மை பணி செய்ய 01.07.2019 முதல் 30.06.2020 வரை ஓராண்டுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

ரெலையான் பெசிலிட்டி சர்வீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் 22.06.2019ம் தேதிய விண்ணப்பத்தில் ஒரு நபருக்கு ஒருநாளைக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 307/– வீதம் மீண்டும் 01.07.2020 முதல் 30.01.2021 வரை ஏழு மாத காலத்திற்கு மேற்படி பணியினை செய்ய சம்மதம் தெரிவித்து அதற்கான அனுமதி வழங்கிட கேட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணிக்காலம் 30.06.2020ம் தேதியுடன் முடிவடைவதால் ஒப்பந்த பத்திரத்தில் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி மீண்டும் 01.07.2020 முதல் தொடர்ந்து அனுமதி காலம் வரும் வரை மேற்படி பணியினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும், அதற்கான செலவினத்திற்கும் மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு மேற்படி காலத்திற்கு பின்னேற்பு பெறவும், மூன்றாண்டு காலத்திற்கு அனுமதி பெறவும் பிரேரணை அனுப்பி வைக்கவும், அதற்காகும் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1582/2015/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 652, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 8

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மதுரை–கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் நெடுஞ்சாலைத் துறையினால் பாலம் பழுது பார்க்கும் பணி நடைபெற உள்ளது. அதுசமயம் பாலத்தின் குறுக்கே செல்லும் குடிநீர் விநியோக பிரதான குழாய் உடைப்பு ஏற்பட்டதால் அதனை பழுது மற்றும் பராமரிக்கும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச் செலவுத் தொகை ரூ.90,000/–க்கு மேற்கண்ட பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.சேசப்பன் மூலம் செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
(ந.க.எண். 273/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 653, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 9

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பைபாஸ் ரோட்டில் உள்ள மேல்நிலை தொட்டியில் உள்ள 25 எச்.பி பம்பு யூனிட்–2 பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் குடிநீர் விநியோகம் செய்ய சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே பம்பு மோட்டாரினை பழுது பார்க்கும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.12,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 281/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 654, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 10

இந்நகராட்சிக்குட்பட்டுள்ள வார்டு எண்.1 முதல் 24 வரை உள்ள பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்–19) தற்போது மிகத்தீவிரமாக பரவி வருவதால் அதனை தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக கீழ்க்கண்ட பொருட்களை வாங்குவதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.25.00 லட்சத்திற்கு வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து செலவு செய்யவும், பின்னர் அரசு நிதியில் இருந்து ஈடு செய்து கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | முகக்கவசம் | .. | 10,000 எண்ணம் |
| 2. | N95 – முகக்கவசம் | .. | 300 எண்ணம் |
| 3. | நில வேம்பு | .. | 500 கிலோ |
| 4. | கவசுர குடிநீர் | .. | 750 கிலோ |
| 5. | கையுறை (Synthetic) | .. | 450 எண்ணம் |
| 6. | கையுறை (ஒருமுறை மட்டும் பயன்படுத்துதல்) | .. | 10,000 எண்ணம் |
| 7. | வைட்டமின்–சி மற்றும் | .. | 2.5 லட்சம் |
| 8. | லைசால் | .. | 2000 லிட்டர் |
| 9. | சோடியம் ஹைபோகுளோரேட் | .. | 1000 லிட்டர் |
| 10. | பிளீச்சிங்பவுடர் | .. | 3000 கிலோ |
| 11. | சுண்ணாம்பு பவுடர் | .. | 7000 கிலோ |
| 12. | உடற்கவசம் (PPE Kit) ஜிங்க் மாத்திரைகள் | .. | 200 எண்ணம் |
| 13. | சானிடைசர் | .. | 50 லிட்டர் |

(ந.க.எண். 165/2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 655, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 11

சாத்தூர் நகராட்சியில் ஒவ்வொரு ஆண்டும் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையினால் தணிக்கை மேற்கொள்ளப்படும் போது ஆண்டு கணக்கினை முடிப்பதற்கு ஏதுவாக பட்டயக்கணக்கர் ஒருவரை தணிக்கையின் போது பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 2019–2020ம் ஆண்டிற்கான கணக்கினை முடித்த வகைக்கு திரு.வி.சீனிவாசன், பட்டயக்கணக்கர் அவர்கள் ரூ.30,000/–க்கு பட்டியல் தொகை வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை ரூ.30,000/–ஐ திரு.வி.சீனிவாசன், பட்டயக்கணக்கருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.2129/2009/பி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 656, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 12

இந்நகராட்சியின் 2018–2019ம் ஆண்டுக்கான வரவு மற்றும் செலவினக் கணக்கினை உள்ளாட்சி நிதித்துறையினரால் தணிக்கை செய்யப்பட்டதற்கான தணிக்கை கட்டணம் ரூ.93,273/– அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும் என தணிக்கை அறிக்கையிலும் மற்றும் விருதுநகர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை உதவி இயக்குநர் அவர்களின் வேண்டுகோளின்படி தணிக்கை கட்டணம் ரூ.93,273/–யை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.4174/97/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 657, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 13

சாத்தூர் நகராட்சிக்கு 2020–21ம் ஆண்டிற்கு குடிநீர் விநியோகத்திற்கு தேவையான லிக்யூடு குளோரின் சப்ளை செய்ய 29.06.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s.Sri Sabari Engineering – மதிப்பீட்டு விகிதத்திற்குள்ளே
2. M/s. Rajaganpathi Engineering Works – மதிப்பீட்டை விட 0.84% அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Sri Sabari Engineering ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.164/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 658, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 14

சாத்தூர் நகராட்சியினால் **2020–21**ம் ஆண்டிற்கு கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள மோட்டார்கள் மற்றும் பம்புகளை பழுது பார்க்கும் பணியினை அவ்வப்போது மேற்கொள்ள **29.06.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s.Ganga Electricals – மதிப்பீட்டை விட **4.45**% குறைவு
2. M/s. Siva Electricals – மதிப்பீட்டை விட 5.67% அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Ganga Electricals ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.213/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 659, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 15

சாத்தூர் நகராட்சி பகுதிகளில் உள்ள **24** வார்டுகளில் உள்ள **1.5** எச்.பி கம்பரஸர் மோட்டார்களை **2020–21**ம் ஆண்டிற்கு பழுது பார்க்கும் பணியினை அவ்வப்போது மேற்கொள்ள **29.06.2020**ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s.Ganga Electricals – மதிப்பீட்டை விட **0.09** % குறைவு
2. M/s. Siva Electricals – மதிப்பீட்டை விட 1.21% அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Ganga Electricals ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.214/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 660, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 16

சாத்தூர் நகராட்சி உள்ளூர் குடிநீர் ஆதாரமான இருக்கண்குடியில் உள்ள உறைகிணற்றில் கழிவு மண்களை அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ள 29.06.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.பி.சுப்பாராஜ் | – | மதிப்பீட்டை விட 0.03 % குறைவு |
| 2. | திரு.எஸ்.சேசப்பன் | – | மதிப்பீட்டை விட 1.78% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.சுப்பாராஜ் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம். அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.204/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 661, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 17

நகராட்சி பொது பிரிவில் உள்ள ஈப்பு வாகனம் TN 67 BA 5269 வண்டிக்கு காலமுறை பராமரிப்பு பணிகளை மதுரை கப்பலூர் மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் Manufactures – Mahindra Authorized Dealer, Madurai, மூலம் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**பழுது விபரம்**

1. வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
2. ஆயில் சர்வீஸ், ஆயில் பில்டர், டீஸல் பில்டர் புதியது மாற்ற வேண்டும்.
3. 4 வீல் கீரிஸ் பேக்கிங் செய்து பீரேக்குக்கு செக்கப் செய்ய வேண்டும்.
4. ஹாரன் பேகு புதியது மாற்ற வேண்டும்.
5. ஹாரன் கட் ஆவுல்டர் புதியது மாற்ற வேண்டும்.
6. பேக் ஸ்பிரின் கட்டு பிரித்து டெம்பர் அடித்து மாட்ட வேண்டும்.
7. டைனமோ, செல்ப் மோட்டர் செக்கப் செய்து ஓவராயலிங் செய்து மாட்ட வேண்டும்.
8. வாகனம் தற்போது வரை 1,40,000 கி.மீ இயக்கப்பட்டுதால் அதற்கு உண்டான பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ந.க.எண் 313/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 662, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 18

நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67 BE 5382 வண்டிக்கு தகுதிச் சான்று 30.10.2020—உடன் முடிவு பெறுவதால் தகுதிச் சான்று புதிப்பிக்கும் பொருட்டு வண்டியில் உள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேசச் செலவுத் தொகை ரூ.45,000/—க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**பழுது விபரம்**

1. வாகனம் வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
2. இன்ஜின் ஆயில் சர்வீஸ் செய்யவும், கியர் ஆயில் பில்டர்கள் மாற்றவும் வேண்டும்.
3. வாகனம் 4 வீல் கீரிஸ் பேக்கிங் செய்து பீரேக்குக்கு செக்கப் செய்ய வேண்டும்.
4. வாகனத்தில் உள்ள ஜெட்ராய்டு இன்ஜின் ஆயில் பில்டர் கூலண்ட் ஆயில் மாற்ற வேண்டும். 5. ஜெட்ராய்டு வாட்டர் இன்ஜக்டர் கியர் பாக்ஸ் ஆயில் புதியது மாற்ற வேண்டும்.
6. வாகனத்தில் உள்ள பேட்டரி புதியது மாற்ற வேண்டும்.
7. வாகனத்தில் உள்புறம், வெளிபுறம் பெயின்டிங் செய்து, அசுர வாசகங்கள் எழுத வேண்டும்.
8. வாகனத்தில் ஸ்பிடுகன் ரோல் மீட்டர் புதியது மாற்ற வேண்டும்.
9. வாகனத்தில் முன்பகுதி, பின்பகுதி ஸ்டிக்கர் ஒட்டவும், எலக்ட்ரானிக் லையிட் செக்கப் செய்ய வேண்டும்.

(ந.க.எண் 329/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 663, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 19

சாத்தூர் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தீவிரமாக பரவி வருவதால் விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நோயினை கட்டுபடுத்தும் பொருட்டு பாதிப்பு அடைந்த தெருக்களில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கி நோய் பாதிப்பு அடைந்த பகுதிகளை கட்டுபடுத்தப்பட்ட பகுதியாகவும் அறிவுறுத்துள்ளார். மேற்கண்ட பகுதிகளில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இரும்பிலான தடுப்பு வேலி 10 எண்ணம் செய்யவும், அதற்கான செலவுத் தொகை ரூ.90,000/—யை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 15—ன் கீழ் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.
(ந.க.எண்.334/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 664, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 20

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN.67Z 4628 வாகனத்தில் உள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய 26.08.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | செலவு தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | ராஜா மோட்டார் ஒர்க்ஸ், சொக்கலிங்கம் பூங்கா, பைபாஸ் ரோடு, சாத்தூர். | 87,000/– |
| 2 | ஸ்ரீ கலைமகள் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மெயின் ரோடு, சாத்தூர். | 84,000/– |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கலைமகள் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சாத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.29/2020/எச்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 665, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 21</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN.67AH 6760 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய 06.08.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | செலவு தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | சித்திக் சர்வீஸ் லூப்ரிகேசன் & ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | 73,500/– |
| 2 | N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி. | 72,410/– |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்புந்தப்புள்ளிகளும் வைப்புத் தொகை செலுத்தியுள்ளார்கள். வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.N.A.ரகமத்துல்லா ஆட்டோ மொபைல் ஒர்க்ஸ், கோவில்பட்டி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.54/2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 666, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 22

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN.67BJ 4441 வண்டிக்கு டீசல் ஆயில் பில்டர்கள் மற்றும் கூலி உள்பட செலவு செய்தமைக்கு ஓட்டுநர் திரு.கா.இராமநாதன் என்பவருக்கு ரூ.6,500/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். /2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 667, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 23

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN.67BE 4983 வண்டிக்கு தகுதிச்சான்று 02.09.2020ல் முடிவடைந்துள்ளது. அதனை 03.09.2020 முதல் புதுப்பிக்கவும், அதனை பழுது பார்த்து தகுதிச்சான்று பெற ஆகும் செலவுத் தொகை ரூ.99,500/—க்கும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி TVS நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 348/2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 668, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 24

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN.67AJ 6058 வண்டிக்கு தகுதிச்சான்று 12.09.2020ம் தேதியுடன் முடிவடைந்துள்ளது. அதனை 13.09.2020 முதல் புதுப்பிக்கவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.42,000/—க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 339/2020/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 669, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 25

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் ந.க.எண். 276/2020/அ2, 18.08.2020ம் தேதிய கடிதத்தில் 2020—2021ம் ஆண்டிற்கு இந்நகராட்சியில் இருந்து செலுத்தப்பட வேண்டிய பங்குத் தொகை ரூ.20,000/—ஐ செலுத்தக் கோரப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.20,000/—ஐ தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 670, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 26

இந்நகராட்சியின் 2019–2020ம் ஆண்டுக்குரிய நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.356/2010/சி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 671, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்: 27

இந்நகராட்சிப் பொறியியல் பிரிவில் குடிநீர் பணி, பாதாள சாக்கடைப்பணி மற்றும் தெருவிளக்கு பராமரிப்புக்கென கீழ்க்கண்ட வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட வாகனங்களை இயக்குவதற்கு போதிய ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் அனைத்து வாகனங்களையும் இரண்டு ஒட்டுநர்களைக் கொண்டு பணிகள் பார்க்கப்பட்டு வருவதாகவும், மிகவும் அத்தியாவசிய பணிகளை பார்ப்பதற்கு சிரமம் ஏற்படுவதாகவும், பொதுமக்களிடமிருந்து பழுது சம்மந்தமான புகார்களுக்கு உடனுக்குடன் சரி செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாலும், தற்போது நிரந்தர ஓட்டுநர்களை நிரப்புவதற்கு நிர்வாக சிக்கல் உள்ளது எனவும், அரசு சார்ந்த Tamil Nadu Ex-service Man’s Corporation Limited, Chennai நிறுவனத்தின் மூலம் இரண்டு ஒட்டுநர்களை தற்காலிகமாக நியமனம் செய்ய பொறியியில் பிரிவின் மூலம் குறிப்பு தரப்பட்டுள்ளது.

**வாகன விவரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரிய குடிநீர் டேங்கர் லாரி | – | TN 67A 7796 |
| 2. | சிறிய குடிநீர் டேங்கர் லாரி | – | TN 67B 7759 |
| 3. | ஜெட்ராய்டு வாகனம் | – | TN 67BC 5382 |
| 4. | ஜெட்ராய்டு வாகனம் | – | TN 67J 4441 |
| 5. | பெரிய ஜெட்ராய்டு வாகனம் | – | TN 67BK 1057 |
| 6. | தெருவிளக்கு வாகனம் | – | TN 67AC 5394 |

மேற்படி பிரிவில் பயன்படுத்தப்படும் 6 வாகனங்களுக்கு இரண்டு ஓட்டுநர்களே உள்ளதாலும், நிரந்தர ஓட்டுநர் பணியிடம் நிரப்புவதற்கு நிர்வாக சிக்கல் உள்ளதால் அரசு சார்ந்த Tamil Nadu Ex-service Man’s Corporation Limited, Chennai நிறுவனத்தின் மூலம் இரண்டு ஓட்டுநர்களை வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்காலிகமாக நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண்.357/2020/சி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 672, நாள்: 31.08.2020.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**(ஒம்) என்.ராஜமாணிக்கம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**